**SAPTARISHI AGRO INDUSTRIES LIMITED**
**Regd. Office: Padalam Sugar Factory Road, Pazhayanoor Post,**
**Chengalpattu (Previously: Kancheepuram), District, Tamilnadu- 603 3**
**||www.saptarishiagro.com || Saptarishi121@gmail.com ||**
**CIN: L15499TN1992PLC022192 II Contact No. 079-40306965 II**

Saptarishi™
Agro Industries Ltd

Date: 02 September, 2024

To,
The General Manager,
Corporate Relationship Department,
Bombay Stock Exchange Ltd.
25th Floor, Phiroze Jeejeebhoy Towers,
Dalal Street, Fort,
Mumbai – 400 001

SCRIP CODE: 519238 | SCRIP ID: SPTRSHI | ISIN: INE233P01017

Dear Sir/Madam,

Sub: Newspaper Public Notice- 32nd Annual General Meeting of the Company

Please find enclosed herewith the public notice for the 32nd Annual General Meeting of the Company and the information on E-voting published on Sunday September 01, 2024, in the following newspapers:

1) Trinity Mirror
2) Makkal Kural

Kindly take the same on your record.

Thanking you,
Yours Faithfully,

**For, Saptarishi Agro Industries Limited**,

PRIYANKA TRIPATHI
Digitally signed by PRIYANKA TRIPATHI
Date: 2024.09.02 12:06:13 +05'30'

**Priyanka Tripathi**
**Company Secretary & Compliance Officer**
**Membership No.: A29454**

# செம்மர கடத்தல் வழக்கு: வேலூர் போலீஸ் துணை சூப்பிரண்டு 'டிஸ்மிஸ்'

சென்னை, செப்.1–

**2015ம் ஆண்டு செம்மர கடத்தல் வழக்கில் கைதான போலீஸ் துணை சூப்பிரண்டு தங்கவேலு மீது டிஸ்மிஸ் நடவடிக்கையை தமிழக அரசு எடுத்துள்ளது.**

திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூரை அடுத்த பாலூரை சேர்ந்த பா.ம.க. பிரமுகர் சின்னபையன் செம்மரக் கடத்தல் சம்பவத்தில் கடந்த 2015ம் ஆண்டு மே மாதம் கொலை செய்யப்பட்டார். அவர் நடத்தி வந்த கோழி பண்ணையில் பதுக்கி வைத்திருந்த 7 டன் செம்மரக்கட்டைகள் மாயமானதால் செம்மரக்கடத்தல் கும்பல் அவரை தீர்த்துக்கட்டியது.

போலீசார்விசாரணையில்,அலமேலு மங்காபுரத்தை சேர்ந்த நாகேந்திரன், அவரது மனைவி ஜோதி லட்சுமி ஆகியோர்தான் சின்னப்பையனின் கோழி பண்ணையில் இருந்து செம்மரக்கட்டைகளை திருடி சென்றது தெரிய வந்தது. இதைத்தொடர்ந்து அவர்கள் கைது செய்யப்பட்டனர். போலீசார் விசாரணையில் அவர்கள் திடுக்கிடும் வாக்குமூலம் அளித்திருந்தனர்.

அதில், வேலூர் கலால் போலீஸ் துணை சூப்பிரண்டாக பணியாற்றிய தங்கவேலுதான் இந்த செம்மரக்கட்டைகளை கடத்தி வர சொன்னார். அவருடன் இந்த செம்மரக்கட்டைகளை பங்கிட்டு கொண்டோம்' என்று தெரிவித்தனர்.

இதைத்தொடர்ந்து வேலூர் போலீஸ் துணை சூப்பிரண்டு தங்கவேலு தலைமறைவு ஆனார். முன் ஜாமீன் பெறும் முயற்சியிலும் ஈடுபட்டார். ஆனால் போலீசார் தேடுதல் வேட்டை நடத்தி அவரை காட்பாடியில் வைத்து கடந்த 2015ம் ஆண்டு ஜூன் மாதம் கைது செய்து சிறையில் அடைத்தனர். இதைத்தொடர்ந்து அவரை பணி இடைநீக்கம் செய்து அப்போதைய டி.ஜி.பி. உத்தரவிட்டார்.

இந்த செம்மர கடத்தல் வழக்கு ஆம்பூர் கோர்ட்டில் நடந்து வரும் வேளையில், போலீஸ் துணை சூப்பிரண்டு தங்கவேலுவின் பணி காலம் கடந்த மார்ச் மாதத்துடன் முடிவடைந்தது.


செம்மர கடத்தல் வழக்கில் சிக்கியதால் அவரை பணியில் இருந்து ஓய்வு பெற அரசு அனுமதிக்கவில்லை. அவர் மீதான பணி இடைநீக்க உத்தரவு தொடர்ந்து அமலில் இருந்து வந்தது. இந்த நிலையில் அவரை 'டிஸ்மிஸ்' (பணி நீக்கம்) செய்து தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

# அண்ணா பல்கலைக்கழகம் உருவாக்கிய டிரோன் தொழில்நுட்பத்துக்கு காப்புரிமை

சென்னை, செப்.1–

**அண்ணா பல்கலைக்கழக பேராசிரியர்கள், மாணவர்கள் கண்டுபிடித்த டிரோன் தொழில்நுட்பத்துக்கு இந்தியாவில் முதல் முறையாக காப்புரிமை கிடைத்துள்ளது.**

இந்தியாவில் வேளாண் தொழில் முதற்கொண்டு அனைத்து துறைகளிலும் டிரோன்களின் பயன்பாடுகள் அதிகரிக்கத் தொடங்கி விட்டன. அதிலும், குறிப்பாக பாதுகாப்புத்துறையில் மிகவும் திறமையான ஆளில்லாவாகனமாகவும் இதை பயன்படுத்துகிறார்கள்.



அந்தவகையில் சென்னை அண்ணா பல்கலைக்கழக எம்.ஐ.டி. வளாகத்தில் உள்ள டாக்டர் கலாம் மேம்பட்ட ஆளில்லா விமான ஆராய்ச்சி மையம் கண்டுபிடிக்கும் தொழில்நுட்பம் மூலம் தக்ஷா டிரோன் நிறுவனம் பல்வேறு பயன்பாடுகளுக்கு டிரோன் களை வடிவமைத்து வருகிறது.

சமீபத்தில் ராணுவ வீரர்களுக்கு உணவு, மருந்து மற்றும் அவசர காலங்களில் ராணுவ தளவாடங்கள், ஆயுதங்கள் போன்றவற்றை எடுத்துச் செல்லக்கூடிய கருவியாகவும் டிரோனைகளை பயன்படுத்த திட்டமிட்டுள்ளனர்.

இந்த நிலையில் இதுவரை தயாரிக்கப்பட்ட டிரோன்கள் புறப்பட்ட இடத்தில் இருந்து அது சென்று திரும்பும் வகையில்தான் தொழில்நுட்பம் வடிவமைக்கப்பட்டு இருந்தது. ஆனால் சம்பந்தப்பட்ட இடத்தில் அந்த டிரோன் தரையிறங்கும் வகையிலான தொழில்நுட்பத்தை அண்ணா பல்கலைக்கழக எம்.ஐ.டி. பேராசிரியர்கள், மாணவர்கள் கண்டுபிடித்தனர். அதாவது, தரையிறங்கும் இடத்தில் கலர் மார்க் அல்லது கியூஆர் கோடு இருக்கும் பட்சத்தில் ஆட்டோமெட்டிக்காக டிரோன் தரையிறங்கும். இதனை "புத்திசாலித்தனமான தரையிறக்கம்" (இன்டெலிஜென்ட் லேண்ட்) என தெரிவிக்கின்றனர். இதற்கான காப்புரிமை பெறுவதற்காக மத்திய அரசிடம் கடந்த 2018ம் ஆண்டு அண்ணா பல்கலைக்கழக எம்.ஐ.டி. பேராசிரியர்கள், மாணவர்கள் குழுவினர் விண்ணப்பித்தனர். கடந்த 6 ஆண்டுகளாக காப்புரிமை வழங்குவது தொடர்பான ஆய்வுகள், விசாரணைகள் அனைத்தும் நிறைவுபெற்று, தற்போது அதனை மத்திய அரசின் காப்புரிமை அலுவலகம் வழங்கியுள்ளது.

குரோம்பேட்டை எம்.ஐ.டி. விண்வெளி ஆராய்ச்சி மையத்தின் பேராசிரியரும், இயக்குனருமான கே.செந்தில்குமார், தாமரைச் செல்வி, முகமது ரஷித், முத்துசெல்வம் ஆகிய 4 பேரின் பெயரில் வழங்கப்பட்டு இருக்கிறது. இந்த காப்புரிமை இந்தியாவிலேயே அண்ணா பல்கலைக்கழகத்துக்குதான் முதல் முறையாக கிடைத்திருக்கிறது.

தற்போது அந்த தொழில்நுட்பத்துக்கான காப்புரிமை கிடைத்ததை தொடர்ந்து, இதனை டிரோனுடன் சேர்ந்து வடிவமைக்கும் பணிகள் இன்னும் 6 மாதங்களுக்குள் முடிவடையும் எனவும், அதன் பின்னர் இந்த தொழில்நுட்பத்தை ஏராளமான விஷயங்களுக்கு பயன்படுத்த முடியும் எனவும், அவசர கால பட்டனை அழுத்தினால் எப்படி உடனுக்குடன் உதவி கிடைக்குமோ? அதேபோல் இந்த டிரோன் தொழில்நுட்பம் மூலமும் உதவிகள் கிடைக்கும் வகையில் அது வடிவமைக்கப்பட இருக்கிறது எனவும் அண்ணா பல்கலைக்கழக எம்.ஐ.டி. விண்வெளி ஆராய்ச்சி மையத்தின் பேராசிரியரும், இயக்குனருமான கே.செந்தில்குமார் தெரிவித்தார்.

## ஊழல் தடுப்பு சட்டத்தின் கீழ்

# செந்தில் பாலாஜிக்கு எதிராக குற்ற வழக்கு தொடர கவர்னர் அனுமதி

புதுடெல்லி, செப்.1–

**ஊழல் தடுப்பு சட்டத்தின் கீழ் முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜிக்கு எதிராக குற்ற வழக்கு தொடர தமிழக கவர்னர் ஆர். என்.ரவி அனுமதி அளித்து உத்தரவிட்டுள்ளார்.**

திருவண்ணாமலை மாவட்டம் ஆரணியை சேர்ந்த பாலாஜி சார்பில் வக்கீல் பாலாஜி சீனிவாசன் சுப்ரீம் கோர்ட்டில் தாக்கல் செய்த மனுவில், தமிழக போக்குவரத்து துறையில் வேலை வாங்கி தருவதாக முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜிக்கு எதிரான ஊழல் வழக்குகளில் சிறப்பு வக்கீலை நியமிக்கவும், அவருக்கு எதிரான வழக்குகளை ஓராண்டுக்குள் நிறைவு செய்யவும், இந்த வழக்குகளில் தமிழக அரசு செய்து வரும் தாமதத்தை விசாரித்து அதற்கு காரணமானவர்களுக்கு எதிராக கிரிமினல் வழக்கு பதிவு செய்ய உத்தரவிட வேண்டும் எனவும் கோரப்பட்டுள்ளது.

இந்த மனுவை சுப்ரீம் கோர்ட் நீதிபதிகள் அபய் எஸ்.ஒகா, ஏ.ஜி. மாசி ஆகியோர் அடங்கிய அமர்வு விசாரித்து வருகிறது. கடந்த 23ந்தேதி மீண்டும் நடைபெற்ற விசாரணை யின்போது நீதிபதிகள், செந்தில் பாலாஜி தொடர்புடைய வழக்குகளில் சிறப்பு கோர்ட்டில் விசாரணை எப்போது தொடங்கும்? அரசு தரப்பு சிறப்பு வக்கீலை நியமிக்க கோருவது குறித்து தமிழக அரசின் நிலைப்பாடு என்ன? என கேட்டனர்.

தமிழக அரசின் சார்பில் வக்கீல் டி.குமணனுடன் மூத்த வக்கீல் சேகர் நாப்தே ஆஜராகி, இந்த விவகாரத்தில் சுப்ரீம் கோர்ட் விதித்த காலக்கெடுவின்படி குற்றப்பத்திரிகை கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே விசாரணை அதிகாரி மீது எவ்வித குறையும் இல்லை. அரசு தரப்பு சிறப்பு வக்கீலை நியமிக்கும் கோரிக்கைக்கு ஆட்சேபம் தெரிவித்தனர்.

முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜிக்கு எதிராக ஊழல் தடுப்பு சட்டத்தின் கீழ் குற்ற வழக்கு தொடரும் அனுமதி தொடர்பான கோப்பை தமிழ்நாடு அரசு கவர்னருக்கு கடந்த ஜனவரி 4ந்தேதி அனுப்பி வைத்தது. கவர்னர் அலுவலகத்தில் கேட்ட கூடுதல் விசாரணை அறிக்கையையும் பிப்ரவரி 2ந்தேதி அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இதே விவகாரத்தில் குற்றம்சாட்டப் பட்டுள்ள 72 அரசு ஊழியர்களுக்கு எதிராக ஊழல் தடுப்பு சட்டத்தின் கீழ் குற்ற வழக்கு தொடரும் அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது. கவர்னரின் அனுமதி கிடைத்தவுடன் செந்தில் பாலாஜிக்கு எதிரான வழக்கு விசாரணை தொடங்கும் என வாதிட்டார்.

மனுதாரர் ஒய்.பாலாஜி சார்பில் மூத்த வக்கீல் கோபால் சங்கரநாராயணன் ஆஜராகி, செந்தில் பாலாஜிக்கு எதிராக ஊழல் தடுப்பு சட்டத்தின் கீழ் குற்ற வழக்கு தொடரும் அனுமதி தேவையில்லை. 2ஜி வழக்கு, தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதா சொத்துக்குவிப்பு வழக்கு போன்றவற்றில் அரசு தரப்பு சிறப்பு வக்கீலை நியமித்ததை போல, இந்த வழக்கில் நியமிக்க வேண்டும். இது சுப்ரீம் கோர்ட் தீர்ப்பில் வலியுறுத்தப்பட்டுள்ளது என வாதிட்டார்.

அனைத்து தரப்பு வாதங்களையும் பதிவு செய்து கொண்ட நீதிபதிகள், செந்தில் பாலாஜிக்கு எதிராக ஊழல் தடுப்பு சட்டத்தின் கீழ் குற்ற வழக்கு தொடரும் அனுமதிக்கோரி கவர்னருக்கு அனுப்பி வைக்கப்பட்ட கடித விவரங்களையும், அரசு தரப்பு வக்கீலாக நியமிக்கப்பட்டுள்ளவரின் விவரத்தையும் தமிழக அரசு தாக்கல் செய்யவேண்டும் என உத்தரவிட்டு விசாரணையை செப்டம்பர் 2ந்தேதிக்கு தள்ளிவைத்தனர்.

இந்நிலையில், தமிழ்நாடு அரசின் உள்துறையின் சிறப்பு பிரிவின் இணைச்செயலாளர் கே.மோகனகுமார் சார்பில் வக்கீல் டி.குமணன் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரத்தில், செந்தில் பாலாஜிக்கு எதிராக ஊழல் தடுப்பு சட்டத்தின் கீழ் குற்ற வழக்கு தொடர அனுமதி கோரி கவர்னருக்கு அனுப்பி வைக்கப்பட்ட கோப்பு விவரங்களையும், அவருக்கு எதிராக ஊழல் தடுப்பு சட்டத்தின் கீழ் குற்ற வழக்கு தொடரும் அனுமதியை கவர்னர் ஆர்.என்.ரவி கடந்த 23ந்தேதி இரவு 8.30 மணிக்கு அளித்துள்ளதும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

மேலும், செந்தில் பாலாஜிக்கு எதிரான ஊழல் வழக்குகள் விசாரணை தாமதமாவதை கண்டறிய சிறப்பு புலனாய்வு குழு(எஸ்ஐடி) அமைக்க கோரிய மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ராகுல்காந்தி 8–ந்தேதி அமெரிக்கா பயணம்

புதுடெல்லி, செப்.1–

**ராகுல்காந்தி அமெரிக்காவில் 3 நாள் சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார். இதற்காக அவர் 8ந் தேதி அமெரிக்கா புறப்படுகிறார்.**

மக்களவை எதிர்க்கட்சி தலைவரும், காங்கிரஸ் முன்னாள் தலைவருமான ராகுல்காந்தி வருகிற 8 முதல் 10ந் தேதி வரை அமெரிக்காவில் சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார். அப்போது டல்லாஸ் மற்றும் வாஷிங்டன் ஆகிய நகரங்களுக்கு செல்லும் ராகுல்காந்தி மாணவர்கள், கல்வியாளர்கள் மற்றும் பல்வேறு துறைகளைச் சேர்ந்த நிபுணர்களுடனும், இந்திய வம்சாவளி மக்களுடனும் உரையாடல்களை நடத்த உள்ளார். இது குறித்து காங்கிரஸ் சர்வ தேச பிரிவின் தலைவர் சாம் பிடோர்டா கூறியதாவது:– 32 நாடுகளில் இருக்கும் காங்கிரஸ் சர்வதேச பிரிவின் தலைவர் என்கிற முறையில் என்னிடம் அமெரிக்காவில் உள்ள இந்திய வம்சாவளியினர், தூதர்கள், கல்வியாளர்கள், தொழில் அதிபர்கள், தலைவர்கள், சர்வதேச ஊடகங்கள் மற்றும் பலரிடம் இருந்து ஏராளமான கோரிக்கைகள் குவிந்தன. எதிர்க்கட்சி தலைவரான ராகுல்காந்தியுடன் தொடர்பு கொள்ள வேண்டும் என்பதே அவர்களது கோரிக்கை. அதை நிறைவேற்றும் விதமாக ராகுல்காந்தி மிக குறுகிய பயணமாக அமெரிக்கா வருகிறார். அவர் 8ந் தேதி டல்லாஸ் நகரிலும், 9 மற்றும் 10 ஆகிய தேதிகளில் வாஷிங்டன்னிலும் இருப்பார். டல்லாசில், டெக்சாஸ் பல்கலைக்கழகத்தின் மாணவர்கள் மத்தியில் உரையாற்றும் ராகுல்காந்தி, கல்வியாளர்கள் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்களை யும் சந்திப்பார். இந்திய வம்சாவளி யினருடன் மிகப் பெரிய சந்திப்புக்கு ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. அடுத்த நாள் ராகுல்காந்தி வாஷிங்டன் நகருக்கு செல்வார். அங்கு சிந்தனை குழுக்கள், பத்திரிகையாளர் அமைப்பு மற்றும் பிற அமைப்புகளுடன் அவர் கலந்துரையாடல்களை நடத்துவார்.

ராகுல் காந்திக்காக நிறைய நிகழ்ச்சிகள் திட்டமிடப்பட்டுள்ளன. இந்த வருகையை நாங்கள் ஆவலுடன் எதிர்பார்க்கிறோம். டல்லாஸ் மற்றும் வாஷிங்டனில் உள்ள அரசியல் தலைவர்கள் உள்பட பல்வேறு துறைகளை சேர்ந்த இந்திய வம்சாவளியினர் ராகுல் காந்தியை வரவேற்கவும், அவருடன் உரையாடவும் ஆர்வமாக உள்ளனர்.

இவ்வாறு சாம் பிடோர்டா கூறினார்.

# மது போதையில் தகராறு: உருட்டுக் கட்டையால் தாக்கி எலெக்ட்ரிசியன் கொலை

மன்னார்குடி, செப். 1–

**மன்னார்குடியில் மது அருந்தும்போது இருதரப்பினர் இடையே ஏற்பட்ட மோதலில், உருட்டுக் கட்டையால் தாக்கியதில் எலெக்ட்ரிசியன் பலியானார்.**

மன்னார்குடி தென் வடல் காகிதப்பட்டறை தெருவை சேர்ந்தவர் பார்த்திபன், அதிமுக முன்னாள் நகர்மன்ற உறுப்பினர் சத்யா இவர்களது மகன் ஜெய நாராயணன் (39) தனியார் எலெக்ட்ரிசியனாக வேலைப் பார்த்து வந்துள்ளார். அவருக்கு மனைவி, இரு மகள்கள் உள்ளனர்.சனிக்கிழமை நள்ளிரவு, ஜெயநாராயணன் தனது நண்பர்களுடன் சேர்ந்து பந்தலடி பகுதியில் மது குடித்துக் கொண்டு இருந்துள்ளார். அதே பகுதியில் வேறொரு தரப்பினர் மது குடித்துக் கொண்டிருந்தனர்.

அப்போது இருதரப்பினருக்கும் இடையே வாய் தகராறு ஏற்பட்டதை அடுத்து அங்கிருந்தவர்கள் இரு தரப்பினரையும் சமாதானம் செய்து அனுப்பி வைத்தனர். இதில், ஜெயநாராயணன் தனது வீட்டுக்கு செல்வதற்காக பவுண்ட் சந்து என்ற இடத்திற்கு நடந்து சென்று கொண்டிருந்தபோது, அவரை பின் தொடர்ந்து, இருசக்கர வாகனத்தில் வந்த இரண்டு பேர் ஜெயநாராயணனை உருட்டுக் கட்டையாலும் செங்கல்லால் தாக்கி விட்டு அங்கிருந்து தப்பி ஓடி விட்டனர். இதில், பலத்த காயமடைந்த ஜெயநாராயணனை அருகில் இருந்தவர்கள் மீட்டு, சிகிச்சைக்காக மன்னார்குடி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் மேல் சிகிச்சைக்காக தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில், இன்று காலை அங்கு பலியானார்.

இது குறித்து, மன்னார்குடி காவல் நிலையத்தில் அளிக்கப்பட்ட புகாரின் பேரில் வழக்குப் பதிந்து சந்தேகத்தின் அடிப்படையில் மூன்று பேரை காவல் நிலையத்துக்கு அழைத்து வந்து விசாரணை செய்து வருகின்றனர்.

# இந்தியா – சீனா போரில் பயன்படுத்திய புகைக் குண்டு அசாமில் கண்டுபிடிப்பு

அசாம், செப். 1–

**இந்தியா – சீனா இடையேயான போரின்போது தயாரிக்கப்பட்ட புகைக் குண்டு ஒன்று, அசாமில் கண்டெடுக்கப்பட்ட நிலையில் பாதுகாப்பாக வெடிக்க வைக்கப்பட்டு அழிக்கப்பட்டுள்ளது.**

போரில் எதிரிகளின் பார்வையில் இருந்து தப்புவதற்காக ஒரு புகைத் தடுப்பை ஏற்படுத்த புகைகுண்டுகள் பயன்படுத்தப்படுகின்றன. இதற்கிடையே இந்தியாசீனா இடையே கடந்த 1962ம் ஆண்டு போர் நடைபெற்றது. இந்த போரின் போது தயாரிக்கப்பட்ட ஒரு புகை குண்டு, அசாம் மாநிலம் சோனித்பூர் மாவட்டத்தில் உள்ள தேக்கியாஜுலி என்ற பகுதியில் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

தேக்கியாஜுலிஅருகே உள்ள சேசா ஆற்றில் மீன் பிடித்துக் கொண்டிருந்த ஒருவர், புகை குண்டை கண்டெடுத்ததாக தகவல் வெளியாகியுள்ளது. இந்த புகை குண்டு குறித்து தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு சென்ற போலீசார், புகைக் குண்டை கைப்பற்றி கொண்டு சென்றனர்.

பின்னர் ராணுவ அதிகாரிகளின் முன்னிலையில் புகைக் குண்டு பாதுகாப்பாக வெடிக்க வைக்கப்பட்டு அழிக்கப்பட்டதாக போலீசார் தெரிவித்துள்ளனர்.

# சென்னையில் கார் பந்தயத்துக்கு இடையூறு செய்த நாய்

## மாநகராட்சி ஊழியர்கள் பிடித்து சென்றனர்

சென்னை, செப். 1–

**சென்னையில் கார் பந்தய பாதையில் நாய்கள் ஓடி இடையூ செய்ததால், மாநகராட்சி ஊழியர்கள் அவற்றை பிடித்துச் சென்றனர்.**

தெற்காசியாவிலேயே முதல்முறையாக சென்னையில் இரவு நேரத்தில் சாலையில் பார்முலா 4 கார் பந்தயம் நடத்தப்படுகிறது. நேற்று போட்டியின் பயிற்சி சுற்று நடைபெற்றது. அப்போது பந்தய சாலையில் திடீரென நாய் ஒன்று உள்ளே புகுந்ததால் பரபரப்பு ஏற்பட்டது. உடனடியாக மாநகராட்சி ஊழியர்கள் பந்தய சாலையில் இருந்து அந்த நாயை அப்புறப்படுத்தினர்.

இந்த சூழலில், இன்றைய தினம் கார் பந்தயத்தின் முக்கிய சுற்றான தகுதி சுற்று மற்றும் அடுத்தடுத்த சுற்றுப் போட்டிகள் நடைபெற உள்ளன. இந்நிலையில் கார் பந்தயத்துக்கு இடையூறு ஏற்படாத வகையில், பந்தயம் நடைபெறக் கூடிய சாலை மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் சுற்றித் திரியும் நாய்களை பிடிக்கும் பணியில் மாநகராட்சி ஊழியர்கள் தீவிரமாக ஈடுபட்டு நாய்களை பிடித்து சென்றனர்.


SAPTARISHI™
Agro Industries Ltd

## சப்தரிஷி அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம்: படாளம் சுகர் பேக்டரி ரோடு, பழையனூர் அஞ்சல்,
செங்கல்பட்டு மாவட்டம், தமிழ்நாடு 603 308.
www.saptarishiagro.com | Saptarishi121@gmail.com |
CIN: L15499TN1992PLC022192 I Contact No. 079-40306965

**32வது வருடாந்திரப் பொதுக்கூட்டம், தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு தகவல், கட் ஆப் மற்றும் புத்தகம் மூடல் தேதிகள் அறிவிப்பு**

நிறுவனங்கள் சட்டம், 2013 இன் பொருந்தக்கூடிய விதிகள் மற்றும் அதன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகள் மற்றும் செபி (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்தல் தேவைகள்) ஒழுங்குமுறை, 2015 மற்றும் மே 5, 2020 தேதியிட்ட பொதுச் சுற்றறிக்கை எண். 20/2020, அத்துடன் ஏப்ரல் 8, 2020, ஏப்ரல் 13, 2020, செப்டம்பர் 28, 2020, டிசம்பர் 31, 2020, ஜனவரி 13, 2021 ஜனவரி 31, 2021 மற்றும் மே 5, 2022 தேதியிட்ட சுற்றறிக்கைகள் எண். 14/2020, 17/2020, 33/2020, 39/2020, 02/2021, 21/2021,02/2022 மற்றும் 10/2022 மற்றும் டிசம்பர் 28, 2020 தேதியிட்ட சுற்றறிக்கை எண். 10/2022 (ஒட்டுமொத்தமாக "எம்சிஏ சுற்றறிக்கைகள்" என்று குறிப்பிடப்படுகிறது) மற்றும் செக்யூரிட்டிஸ் அன்ட் எக்சேஞ்ச் போர்டு ஆப் இந்தியா ('செபி') அவ்வப்போது வெளியிட்ட மே 12, 2020 தேதியிட்ட சுற்றறிக்கை எண். SEBI/HO/CFD/CMD1/CIR/P/2020/79, ஜனவரி 15, 2021 தேதியிட்ட சுற்றறிக்கை எண். SEBI/HO/CFD/CMD2/CIR/P/2021/11, மற்றும் மே 13, 2022 தேதியிட்ட சுற்றறிக்கை எண். SEBI/HO/ CFD/CMD2/ CIR/P/2022/62 மற்றும் ஜனவரி 05, 2023 தேதியிட்ட சுற்றறிக்கை எண். SEBI/HO/CFD/PoD-2/P/CIR/2023/4 (இனிமேல் கூட்டாக 'சுற்றறிக்கைகள்' என்று குறிப்பிடப்படுகிறது) ஆகியவை ஒரு பொதுவான இடத்தில் உறுப்பினர்கள் நேரடியாக பங்கேற்காமல், VC/OAVM மூலம் வருடாந்திர பொதுக் கூட்டங்களை நடத்த நிறுவனங்களை அனுமதிக்கப்படுகின்றன. அதன்படி 32வது வருடாந்திர பொதுக்கூட்டம் கூட்டுவது பற்றிய அறிவிப்பில் கண்டுள்ள சாதாரண மற்றும் சிறப்பு வர்த்தகங்களை செயல்படுத்த சப்தரிஷி அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் உறுப்பினர்களின் முப்பத்திரெண்டாவது வருடாந்திர பொதுக்கூட்டம் (32வது AGM) திங்கட்கிழமை, 23 செப்டம்பர், 2024 அன்று காலை 11.00 மணிக்கு இந்திய நேரப்படி காணொளி காட்சி (VC)/இதர ஒளி ஒலி வழிமுறைகள் (OAVM) மூலமாக நடைபெறுகிறது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது. VC/OAVM வசதி மூலம் பங்கேற்கும் உறுப்பினர்கள், நிறுவனங்கள் சட்டம், 2013–ன் பிரிவு 103–ன் கீழ் குறைந்தபட்சம் பங்கேற்பதை கணக்கிடும் நோக்கத்திற்காக கணக்கிடப்படுவார்கள்.

வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்கள், வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பு புழக்கத்தில் உள்ள தேதியிலிருந்து உறுப்பினர்களால் ஆய்வு செய்ய மின்னணு முறையில் கிடைக்கும். அத்தகைய ஆவணங்களை ஆய்வு செய்ய விரும்பும் உறுப்பினர்கள் saptarishi121@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பலாம்.

கம்பெனிகள் சட்டம் 2013 பிரிவு 91 மற்றும் கம்பெனிகள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள் 2014ன் விதி 10ன்படி, கம்பெனியின் 32வது வருடாந்திர பொதுக்கூட்டம் நடைபெறுவதையொட்டி கம்பெனியின் உறுப்பினர்கள் பதிவேடு மற்றும் பங்கு பரிமாற்ற புத்தகங்கள் திங்கட்கிழமை, 23 செப்டம்பர் 2024 முதல் திங்கட்கிழமை, 23 செப்டம்பர் 2024 முடிய (இரு நாட்களும் உள்பட) மூடப்பட்டிருக்கும் என்று இதன் மூலம் மேலும் அறிவிக்கப்படுகிறது.

கம்பெனிகள் சட்டம் 2013 பிரிவு 108 மற்றும் கம்பெனிகள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள் 2014ன் விதி 20 (திருத்தப்பட்டது) மற்றும் செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015ன் விதி 44ன்படி (திருத்தப்பட்டது), சிடிஎஸ்எல்–லினால் அளிக்கப்படும் மின்னணு வாக்குப்பதிவு முறையை (மின்னணு வாக்குப்பதிவு) உபயோகித்து வருடாந்திர பொதுக்கூட்டம் கூட்டுவது பற்றிய அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து தீர்மானங்களின் மீது வாக்களிக்கும் வசதியை உறுப்பினர்களுக்கு கம்பெனி அளித்துள்ளது. (கட் ஆப் தேதியான) திங்கட்கிழமை, 16 செப்டம்பர், 2024 அன்று கம்பெனியின் செலுத்தப்பட்ட பங்கு மூலதனத்தில் அவர்கள் வைத்திருக்கும் சமபங்குகளின் விகிதத்தில் உறுப்பினர்களின் வாக்களிக்கும் உரிமை இருக்கும்.

தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு வெள்ளிக்கிழமை, 20 செப்டம்பர் 2024 அன்று காலை 9.00 மணிக்கு துவங்கி ஞாயிற்றுக்கிழமை, 22 செப்டம்பர் 2024 அன்று மாலை 5.00 மணிக்கு முடிவடைகிறது. இந்த காலத்தில், கட் ஆப் தேதியான திங்கட்கிழமை, 16 செப்டம்பர், 2024 அன்று காகித வடிவில் அல்லது பத்திரமில்லாத வகையில் பங்குகளை வைத்துள்ள கம்பெனியின் உறுப்பினர்கள் அவர்களது வாக்குகளை மின்னணு முறையில் வாக்களிக்கலாம். அதன்பின்னர் மின்னணு வாக்குப்பதிவு முறையை சிடிஎஸ்எல் நிறுத்திவிடும். VC/OAVM வசதி மூலம் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு, தொலைதூரமின்னணு வாக்குப்பதிவு மூலம் தீர்மானங்களில் வாக்களிக்காத உறுப்பினர்கள், அவ்வாறு செய்ய தடை விதிக்கப்படாத உறுப்பினர்கள், வருடாந்திர பொதுக்கூட்டத்தில் மின்னணு வாக்குப்பதிவு முறையில் வாக்களிக்க தகுதி உடையவர்கள் ஆவர்.

வருடாந்திர பொதுக்கூட்டத்திற்கு முன்னர் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவின் மூலம் வாக்களித்த உறுப்பினர்கள் VC/OAVM மூலம் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ளலாம் ஆனால் மீண்டும் வாக்களிக்க உரிமை கிடையாது.

மின்னணு முறையில் அறிவிப்பு அனுப்பிய பின்னர் கம்பெனியின் பங்குகளை பெற்று உறுப்பினரானவர் மற்றும் கட் ஆப் தேதியன்று பங்குகளை வைத்துள்ளவர் helpdesk.evoting@cdslindia.comக்கு கோரிக்கை அனுப்பி லாகின் ஐடி மற்றும் பாஸ்வேர்டை பெறலாம். எனினும், தொலைதூர மின்னணு வாக்குப்பதிவிற்காக ஏற்கனவே சிடிஎஸ்எல்–ல் பதிவு செய்திருந்தால், தற்போதைய உபயோக ஐடி மற்றும் பாஸ்வேர்டை பயன்படுத்தி உறுப்பினர் வாக்களிக்கலாம்

மின்னணு வாக்குப்பதிவு சம்பந்தமாக ஏதேனும் சந்தேகங்கள் இருப்பின் அது குறித்து, உறுப்பினர்கள்/பலன்பெறும் உரிமையாளர்கள், அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் பிரிவு மற்றும் சிடிஎஸ்எல் இணையதளம் www.evotingindia.comல் உள்ள மின்னணு வாக்குப்பதிவு கையேட்டை பார்வை யிடலாம் அல்லது 022–23058738 மற்றும் 022–23058542/43ஐ தொடர்பு கொள்ளலாம். மின்னணு வாக்குப்பதிவு தொடர்பாக ஏதேனும் குறைகள் இருப்பின் அது குறித்து, 25வது மாடி, ஏ விங், மாரத்தான் பியூச்சரெக்ஸ், மபத்லால் மில்ஸ் காம்பவுண்ட், என்எம் ஜோஷி மார்க், லோயர் பரேல் (கி), மும்பை 400 013, மின்னஞ்சல் முகவரி helpdesk.evoting@cdslindia.com அவர்களை தொடர்பு கொள்ளலாம்.

வருடாந்திர பொதுக்கூட்ட விவரங்கள் கம்பெனியின் இணையதளம் https://www.saptarishiagro.com/financial–reports/ மற்றும் CDSL–ன் www.evotingindia.com, பி.எஸ்.இ. லிமிடெட்டின் www.bseindia.comல் கிடைக்கும்

**சப்தரிஷி அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்டிற்காக**
**குருனால் பட்டேல்**
**தலைவர்**
DIN : 02517567

**தேதி: 31 ஆகஸ்ட், 2024**
**இடம்: அஹமதாபாத்**



## பேஸ் ஆட்டோமேஷன் லிமிடெட்

பதிவு அலுவலகம் : எண். 2, 3வது தெரு, பரமேஸ்வரி நகர்,
அடையார், சென்னை –600 020.
**CIN: L29141TN1989PLC018133 | Email: srinivasan@paceautomation.com | Website: https://www.paceautomation.com/**

**34வது வருடாந்திர பொதுக்கூட்ட (AGM) அறிவிப்பு & மின்னணு வாக்குப்பதிவு தகவல்**


1. 26 ஆகஸ்ட் 2024 தேதியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளபடி சாதாரண வணிகத்தை பரிவர்த்தனை செய்ய நிறுவனத்தின் உறுப்பினர்களின் 34வது வருடாந்திர பொதுக்கூட்டம் (AGM) 25 செப்டம்பர், 2024 புதன்கிழமை அன்று காலை 11.30 மணிக்கு (இந்திய நேரப்படி) காணொளி காட்சி("VC")/இதர ஒளி ஒலி சாதனங்கள் ("OAVM") மூலமாக நடைபெறுகிறது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.
2. நிறுவனங்கள் சட்டம், 2013–ன் விதிகள் மற்றும் அதன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகள் மற்றும் செக்யூரிட்டிஸ் அண்ட் எக்ஸ்சேஞ்ச் போர்டு ஆப் இந்தியா (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்தல் தேவைகள்) விதிமுறைகள், 2015 ('பட்டியல் விதிமுறைகள்') மற்றும் கார்ப்பரேட் விவகார அமைச்சகம் (எம்சிஏ) வெளியிட்ட ஏப்ரல் 08, 2020 தேதியிட்ட சுற்றறிக்கை எண். 14/2020; ஏப்ரல் 13, 2020 தேதியிட்ட சுற்றறிக்கை எண்.17/2020; மே 05, 2020 தேதியிட்ட சுற்றறிக்கை எண். 20/2020; ஜனவரி 13, 2021 தேதியிட்ட சுற்றறிக்கை எண். 02/2021; டிசம்பர் 08, 2021 தேதியிட்ட சுற்றறிக்கை எண். 19/2021; மே 05, 2022 தேதியிட்ட சுற்றறிக்கை எண். 02/2022; டிசம்பர் 28, 2022 தேதியிட்ட சுற்றறிக்கை எண். 11/2022 மற்றும் செப்டம்பர் 25, 2023 தேதியிட்ட சுற்றறிக்கை எண். 09/2023 மற்றும் செக்யூரிட்டிஸ் அண்ட் எக்ஸ்சேஞ்ச் போர்டு ஆப் இந்தியா வெளியிட்ட மே 13, 2022 தேதியிட்ட SEBI/HO/CFD/CMD2/CIR/P/2022/62; ஜனவரி 05, 2023 தேதியிட்ட SEBI/HO/CFD/PoD-2/P/CIR/2023/4 ஆகியவற்றுக்கு இணங்க, வருடாந்திர பொதுக் கூட்டம் நடைபெறும் இடத்திற்கு உறுப்பினர்கள் நேரடியாக வருகை தேவையில்லை மற்றும் வருடாந்திர பொதுக் கூட்டம் (AGM) காணொளி காட்சி ("VC") அல்லது இதர ஒளி ஒலி சாதனங்கள் ("OAVM") மூலம் நடைபெற உள்ளது. எனவே, உறுப்பினர்கள் VC/OAVM மூலம் 34வது வருடாந்திர பொதுக் கூட்டத்தில் கலந்துகொள்ளலாம் மற்றும் பங்கேற்கலாம் மற்றும் நிறுவனங்கள் சட்டம், 2013ன் பிரிவு 103ன் கீழ் குறைந்தபட்சத்தை கணக்கிடும் நோக்கத்திற்காக கணக்கிடப்படுவார்கள்.
3. வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பு மற்றும் மார்ச் 31, 2024 அன்று முடிவடைந்த நிதியாண்டிற்கான வருடாந்திர அறிக்கையின் மின்னணு நகல்கள், குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கைகளுக்கு இணங்க, நிறுவனத்தின் பதிவாளர் மற்றும் பங்கு பரிமாற்ற முகவருடன் மின்னஞ்சல் முகவரிகள் பதிவுசெய்யப்பட்ட அனைத்து உறுப்பினர்களுக்கும் அனுப்பப்படும். மேற்கூறிய ஆவணங்கள் நிறுவனத்தின் இணையதளம் https://www.paceautomation.com மற்றும் பங்குச் சந்தையின் இணையதளம் https://www.msei.in/லும் கிடைக்கும். மேற்கூறிய ஆவணங்களின் நகல் நிறுவனத்தால் அதன் உறுப்பினர்களுக்கு கிடைக்காது என்பதை உறுப்பினர்கள் கவனிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
4. கட்ஆஃப் தேதியில் (புதன்கிழமை, 18 செப்டம்பர், 2024) உறுப்பினர்களின் பதிவேடு அல்லது டெபாசிட்டரிகளால் பராமரிக்கப்படும் நன்மை பயக்கும் உரிமையாளர்களின் பதிவேட்டில் பதிவுசெய்யப்பட்ட உறுப்பினர்கள் மட்டுமே தொலைதூர மின்னணு வாக்களிக்கும் வசதி மற்றும் வருடாந்திர பொதுக் கூட்டத்தில் வாக்களிக்க தகுதியுடையவர்கள். நிறுவனம் CDSL–லிருந்து மின்னணு வாக்களிக்கும் சேவைகளைப் பெற்றுள்ளது மற்றும் தொலைதூர மின்னணு வாக்களிப்பு காலம் செப்டம்பர் 22, 2024 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி (இந்திய நேரப்படி) மணிக்குத் தொடங்கி செப்டம்பர் 24, 2024 செவ்வாய்க்கிழமை மாலை 5.00 மணிக்கு (இந்திய நேரப்படி) முடிவடையும்.
5. பட்டியல் விதிமுறைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம், 2013ன் பிரிவு 91 ஆகியவற்றுக்கு இணங்க, கம்பனியின் உறுப்பினர்களின் பதிவேடு மற்றும் பங்கு பரிமாற்ற புத்தகங்கள் செப்டம்பர் 19, 2024 வியாழக்கிழமை முதல் செப்டம்பர் 25, 2024 புதன்கிழமை வரை (இரு நாட்களையும் உள்ளடக்கி) மூடப்பட்டு இருக்கும்.
6. 34வது ஆண்டு பொதுக் கூட்டத்திற்கான மின்னணு வாக்களிப்பு செயல்முறை குறித்த அறிக்கையை வழங்குவதற்கான ஆய்வாளராக, M/s. லக்ஷ்மி சுப்ரமணியன் & அசோசியேட்ஸ், பயிற்சி நிறுவனச் செயலாளர்களை நிறுவனம் நியமித்துள்ளது.
7. நிறுவனத்தில் மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்யாமல் காகித வடிவில் பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்கள், பெயர், போலியோ எண், முழு முகவரி, பதிவு செய்ய வேண்டிய மின்னஞ்சல் முகவரி, பங்குச் சான்றிதழின் ஸ்கேன் செய்யப்பட்ட நகல் (முன் மற்றும் பின்), பான்/ஆதாரின் சுய சான்றளிக்கப்பட்ட ஸ்கேன் செய்யப்பட்ட நகல், உறுப்பினரின் பதிவு செய்யப்பட்ட முகவரியை ஆதரிக்கும் ஆவணங்களுடன் kandhimathi@cameoindia.com–க்கு மின்னஞ்சல் அனுப்பி பதிவு செய்யலாம். டிமேட் வடிவத்தில் பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்கள், srinivasan@paceautomation.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்புவதன் மூலம் தங்கள் மின்னஞ்சல் முகவரியைப் புதுப்பிக்கலாம் மற்றும் சரியான நேரத்தில் தகவல்தொடர்புகளைப் பெற ஆர்டிஏ/டெபாசிட்டரி பங்கேற்பாளரிடம் பதிவுசெய்யப்பட்ட மின்னஞ்சல் முகவரியை புதுப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
8. வருடாந்திர பொதுக் கூட்டத்தில் ஆடியோ காட்சி மூலம் பங்கேற்பதற்கான விரிவான வழிமுறைகள் மற்றும் மின்னணு வாக்குப்பதிவு வசதி மூலம் வாக்களிப்பது குறித்து வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பில் வழங்கப்பட்டுள்ளது. ஏதேனும் வினவல்கள் இருந்தால், மின்னணு வாக்களிப்பு செயல்முறை பற்றிய தெளிவுகளைப் பெற, CDSLன் மின்னணுவாக்களிப்பு இணையதளத்தில் உறுப்பினர்கள் அறிவுறுத்தல்களைப் பார்க்கவும் அல்லது அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் மற்றும் பயனர் கையேட்டைப் பார்க்கவும்.

**குழுவின் ஆணைப்படி**
**பேஸ் ஆட்டோமேஷன் லிமிடெட்டுக்காக**
**ஒப்பம்/–**
S.G. **சந்துரு**
**நிர்வாக இயக்குனர்**
DIN: 0841108

**இடம்: சென்னை**
**தேதி: 01/09/2024**

TRINITY MIRROR





# Dance drama *Bhooloka Vaikuntam - Aranganin Srirangam* held in Chennai

Chennai, Sep 1: A dance drama themed on Srirangam's history titled 'Bhooloka Vaikuntam - Aranganin Srirangam' was staged by Sushobhanam Academy of Classical Arts (SACA) at Krishna Gana Sabhai. Seethalakshmi Vijay, a student of Danseuse – Actor Dr. Sobhana, conceived, choreographed and presented this dance drama with her students.

The event was held yesterday with film actor Y. Gee Mahendra Presiding and Danseuse *Uma Satyanarayana* as the Chief Guest.

It was staged for the 10th time at T.Nagar Krishna Gana Sabha. The event was held with a packed audience from children to adults.

Y. Gee. Mahendra lauded them for an excellent drama that preserves our identity and culture in a manner that appeals to everyone.

# 'TN fishermen attacked mid-sea, robbed by pirates'

Nagapattinam, Sep 1: On September 1 in Nagapattinam, four Tamil Nadu fishermen who had been stranded at sea for over four days have finally made it back home. The men were reportedly assaulted and robbed by unidentified assailants from Sri Lanka on August 24. Fortunately, another group of fishermen assisted them in returning to shore on Friday.

The stranded men were discovered by a group of fishermen from Seruthur, who found them in a starved and dehydrated state. Upon hearing their story, the Seruthur fishermen shared their food and water with the distressed men.

The rescued fishermen are P Kumar and his crew members Kanthan (43), Santacruz (51), and David (51). Kumar, who hails from Kuttiyandiyur near Tharangambadi in Mayiladuthurai district, had been fishing out of the Nagapattinam fishing harbour.

Kumar and his crew set out to sea on August 24 in a motorized boat from Nagapattinam, fishing approximately 12 nautical miles southeast of Kodiyakarai (Point Calimere). They were approached by a group of unidentified individuals, allegedly from Sri Lanka, who boarded their boat and attacked them. The assailants stole two outboard engines, a GPS device, a transceiver, and mobile phones, leaving the fishermen stranded at sea without power.

Their provisions lasted only a day, according to sources. On Friday, the Seruthur fishermen provided one of their two outboard engines to Kumar's group, enabling them to return to shore before continuing with their own fishing trip.

Kumar and his crew safely reached shore later that evening. Kumar was admitted to Nagapattinam General Hospital for treatment. This incident marks the seventh mid-sea assault and robbery reported this month.

# Anushka opts for desi look in new ad

